**தலைப்பு - 300 உணவு ஆணையாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பான தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூலை 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன..

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | காசுப் பாய்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்ட காசுப் பாய்சலின் கீழ் தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவுகள் ரூபா 1,799,527 தொகை கூடுதலாகவும், முதலீட்டு செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்ட காசுப் பாய்சலின் கீழ் மூலதன செலவுகள் ரூபா 1,799,527 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன. மூலதன செலவுகளிற்கு எடுக்க வேண்டிய செலவினம் தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவுகளின் கீழ் இனங்கண்டுள்ளமை இதற்கு காரணமாக இருந்தது. | எதிர்காலத்தில் சரியாக தயாரிக்க அறிவுரை வழங்கப்பட்டதென. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குளை தயாரிக்க வேண்டும். |
| (ii) | 2023 நவம்பர் 30 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 05/2023 இன் 8.2 பந்தி பிரகாரம் நிதியல்லா சொத்துக்கள் கிரயத்திற்கு அல்லது மதிப்பீட்டு பெறுமதிக்கு கணக்கீடு செய்ய வேண்டிய போதும், திணைக்களத்தின் இரண்டு வாகனங்கள் அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சுவீகரிக்கப்பட்ட இரண்டு வாகனங்களினதும் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இருக்காத காரணத்தால் CIGAS தொகுதிக்கு உட்படுத்தவில்லையென. | அரச கணக்குகள் வழிகாட்டலின் பிரகாரம் கணக்குளை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு மீதான இணக்கக்கூற்று**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர் முற்பண பீ கணக்கில் திணைக்கள புத்தகம் பிரகாரம் மற்றும் திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் ஆரம்ப மீதிகளின் வித்தியாசம் ரூபா 332,249 தொகை காணப்பட்டதுடன் சுமார் 10 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் இந்த மீதியை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களின் கடன் மீதிகள் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் இரண்டு முறை குறிப்பிடப்பட்ட காரணத்தால் திறைசேரி புத்தகம் பிரகாரம் குருக்கு குறிப்பின் கீழ் பெறுவனவு ரூபா 240,100 தொகை கூடுதலாக காட்டப்பட்டள்ளது. அதன் படி திணைக்கள புத்தகம் பிரகாரம் மற்றும் திறைசேர் கணனி அச்சின் பிரகாரம் இறுதி மீதியில் ரூபா 572,349 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2000 ஆண்டிற்கு முன்னர் இடம்பெற்ற வித்தியாசமாக இனங்கண்டுள்ளதாக மற்றும் 2023 ஆண்டில் இடம் மாறிச்சென்ற அலுவலர் ஒருவரின் ரூபா 240,100 கடன் மீதி இரண்டு முறை எமது தலைப்பிற்கு செலவு வைக்கும் தவரை சரிசெய்ய வனசீவராசின் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதென. | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தம்புள்ளை கருத்திட்டத்திற்கு உள்ளூர் நிதிய செலவின விடய இலக்கம் 2104 இன் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 124,000,000 ஏற்பாட்டில் ரூபா 14,888,667 மாத்திரம் செலவிட்டு அதனை வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கிற்கு செம்மையாக்கி இருந்த போதும் அந்த செலவு விடயத்தின் கீழ் அதற்கு உரித்தற்ற ரூபா 186,464 ஆன மீண்டுவரும் செலவுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | குறித்த செலவு தம்புள்ளை கருத்திட்டம் தொடர்பான நிருவாக செலவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதென. | செலவுகளை நன்றாக முகாமைத்துவம் செய்ய வேண்டியதுடன் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்குட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கு உரியதாக ரூபா 715,532 ஆன பொறுப்புகள், பொறுப்புகள் தொடர்பாக கூற்றில் குறிப்பிடப்படவில்லை. | அனைத்து பிரிவுகளும் அறிவுருத்தப்பட்டிருக்கையில் சனவரி 31 இற்கு முன்னர் வவுசர்கள் கணக்கு பிரிவிற்கு கிடைக்காததால் மற்றும் செலவின விடயம் 1402 இன் ஏற்பாடு போதியளவு இல்லாததால் பொறுப்புக்களை குறிப்பிட முடியாது போனதென. | ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புகளிற்கு உட்படக் கூடாது. |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கிய ஏற்பாட்டுகளின் பயன்பாடு

அமைச்சரவை பத்திர இலக்கம் 22/0886/506/008-1 இன் கீழான “சீன உதவியின் கீழ் வழங்கப்பட்ட 5000 மெற்றிக் தொன் அரிசியை பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்சித் திட்டம் செயற்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு வழங்குதல்” எனும் தலைப்பில் கல்வி அமைச்சர் முன்வைத்த விஞ்ஞாபனத்திற்கமைய வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 5000 மெற்றிக் தொன் அரிசியை துறைமுக தடை நீக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டு களஞ்சியத்திற்கு போக்குவரத்து செய்தலிற்கு உணவு ஆணையாளரிற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உணவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட விலைகளின் படி ரூபா 11,828,000 தொகையை செலுத்த 2022 ஜூலை 16 திகதிய அமைச்சரவை (1) (அ) தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் தடை நீக்கல நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திணைக்களம் இந்திய மனிதாபிமான உதவி தொடர்பான தடை நீக்கல நடவடிக்கைகளிற்காக விலைமனு கோரி தெரிவு செய்த தடை நீக்கல் நிறுவனத்திற்கே இந்த உடன்படிக்கையையும் ஒப்படைக்க தீர்மானித்திருந்ததுடன் அது தொடர்பாக அந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்திருக்கவில்லை. | முன்வைக்கப்பட்டிருந்த விலைகளின் பிரகாரம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு டென்டர் வழங்கப்பட்டுள்ளதென மற்றும் அந்த விலைகளிற்கு ஏற்ப சீனாவில் இருந்து உதவியாக கிடைத்த அரிசி கொள்கலன்களை துறைமுகத்திலிருந்து தடை நீக்குமாறு அந்த நிறுவனத்திற்கு 2022.06.22 திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளதென. | முறையான உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | தடை நீக்கல் மற்றும் களஞ்சியத்திற்கு போக்குவரத்து செய்வதற்கான கட்டணத்திற்கு மேலதிகமாக ரூபா 3,000,283 ஏனைய கட்டணம் அறவிடப்பட்டுள்ளமை, வெளி பிரதேசங்களிற்கு அரிசி விநியோகிக்க தடை நீக்கல் நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்காத போது 12 அரிசி கொள்களன்கள் வெளி பிரதேசங்களிற்கு விநியோகிக்க | தடை நீக்கல் கட்டணங்களிற்கு மேலதிகமாக துறைமுகக் கட்டணம், கப்பல் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு கட்டணங்கள் மற்றும் அரிசி இருப்புகளை மீண்டும் உணவு ஆணையாளர் திணைக்கள களஞ்சியங்களிற்குக் கொண்டு வர செய்த மேலதிக செலவுகளாக ரூபா 2,260,000 செலுத்தப்பட்டுள்ளதென. | செலவுகளை அங்கீகரித்துக் கொள்ளும் போது அனைத்து செலவுகளையும் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். |

அனுப்பியமை மற்றும் அம் மாகாணங்களால் கையேற்காத காரணத்தால் மீண்டும் ஒருகொடவத்த களஞ்சியத்திற்கு போக்குவரத்து செய்ய நேரிட்ட காரணத்தால் மேலதிக பயணத் தடவைகளிற்கு ரூபா 2,260,000 மேலதிக தொகை தடை நீக்கல் நிறுவனத்திற்கு செலுத்திய காரணத்தால் அங்கீகார செலவினை விஞ்சி ரூபா 5,260,283 மேலதிக தொகையை செலுத்த நேரிட்டிருந்தது.

**2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் உறுதி செய்ய வேண்டியிருந்த போதும், அதன் பிரகாரம் செய்திருக்கவில்லை

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டிய போதும், அறிக்கையின் 3.4 பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகள் காரணமாக அத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு பணிகளை உரியவாறு செயற்படுத்த ஆக்கபூர்வமான செயன் முறையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டிய போதும், அறிக்கையின் 4.1 பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் பிரகாரம் அத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மைகள** | | |
| (அ) | 2009 ஜுன் 17 திகதிய 09/2009 (i) கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 02 (iv) பந்தி | 1,401,701 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின படிகள் போன்றவை உண்மையான கடமை நெரத்தின் பின்னர் செலுத்தப்படும் படிகளிற்காக காலத்தை அடிப்படையாக்க கொள்ளும் போது அக்காலத்தை விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதி செய்ய வேண்டிய போதும் அவ்வாறு செய்யாது 2023 ஆண்டிற்காக ரூபா 1,401,701 ஆன மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பிரதான அலுவலகம் தவிர வேயங்கொடை, தம்புள்ளை மற்றும் ஒருகொடவத்தை ஆகிய களஞ்சியங்களில் ஊழியர் வருகை மற்றும் வெளிச் செல்லல் வரவுப் பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்தப்படுவதென. | சுற்றறிக்கை பிரகாரம் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வருகையை உறுதி செய்து கொண்டு கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பத்தி | | திணைக்கள வாகனங்கள் தெடர்பில் எரிபொருள் பரிசோதனை நடத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திணைக்களம் வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுப்பதென | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியன்று 3 பொது வைப்பு கணக்குகளிற்குரிய ரூபா 121,171,943 மீதி காணப்பட்டது. அந்த மீதியினுள் 01 மற்றும் 05 ஆண்டுகளுக்கு இடையில் ரூபா 51,765,801 மீதியும், 05 | ஒப்பந்தங்களுக்கான நிறுத்தற் தொகையை அந்த நிறுவனங்களினால் கோராமை, சட்ட நடவடிக்கைகள் காரணமாக களஞ்சியம் மற்றும் வீடுகளுக்கு விண்ணப்பிக்காமை மற்றும் தற்போது பயன்படுத்தப்படும் | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 54,522,200 மீதியும் காணப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீடுகள் மற்றும் களஞ்சியங்கள் காணப்படுகின்றமை ஆகிய விடயங்கள் தாக்கம் செலுத்தியுள்ளதாக மற்றும் எதிர்காலத்தில் நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | |

**2.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியன்று இனங்காணாத பெறுவனவுகள் ரூபா 5,108,153 ஆனதுடன் அவற்றுள் 03 ஆண்டுகள் முதல் 01 மாதம் வரையான மீதிகள் இருந்தன. மேலும் தீர்க்கப்படாத ரூபா 737,500 ஆன பெறுவனவுகள் இருந்ததுடன் அந்த பெறுவனவுகள் 18 வருடங்கள் முதல் 02 வருடங்களை விஞ்சிய பெறுவனவுகள் ஆனது. | ரூபா 3,375,200 ஆன பெறுவனவுகளை தற்போது இனங்கண்டுள்ளதுடன் எஞ்சிய இனங்காணாத பெறுவனவுகளை பரீட்சித்துப் பார்த்து விரைவில் நடவடிக்கை எடுக்க குறித்துக் கொள்ளப்பட்டதென. | விரைவில் தீர்க்க நடவக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் முக்கிய பணிகளாக தெற்காசிய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் கொழும்பு சாசனம் மற்றும் 16 ஆவது உச்சி மாநாட்டின் பிரகாரம் 8000 மெற்றிக் தொன் விஷேட அரிசி தொகுதியொன்றை பேணிச் செல்வதற்காக ரூபா 100 மில்லியன் ஏற்பாடு மதிப்பிடப்பட்டிருந்த போதும் அந்த மொத்த ஏற்பாடும் எஞ்சியிருந்ததுடன் எவ்வித அரிசி தொகுதியையும் பேணி இருக்கவில்லை. அதன் பிரகாரம் ஒவ்வொரு வீட்டிற்கும் பாதுகாப்பான, தொடர்ச்சியான, போசாக்கு மிக்க தானிய உணவுகள் என்ற தொலைநோக்கை அடைந்து கொள்ள திணைக்களம் நடவடிக்கை எடுத்ததாக அவதானிக்கப்படவில்லை. | 8000 மெற்றிக் தொன் அரிசி இருப்பை பேணிக் கொள்ள ரூபா 1,996 மில்லியன் கோரப்பட்ட போதும் ரூபா 100 மில்லியன் மாத்திரமே ஏற்பாடு ஒதுக்கப்பட்டது. அது போதாததால் அவ்வாறு ஏற்பாடு எஞ்சிக் காணப்படுவதாக. | முக்கிய பணிகளை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று திணைக்களத்தின் செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தபுள்ளை வெப்பநிலை கட்டுப்பாட்டு கட்டிடத்தை நிர்மாணம் மீளாய்வாண்டின் மார்ச் அளவில் பூர்த்தி செய்யப்படவிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2024 மே 31 திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதென. | விரைவில் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 எதிர்பார்த்த விளைவுகளை அடைந்து கொள்ளாமை

பாதுகாப்பான இருப்பாக நீண்ட காலத்திற்கு அரிசி இருப்பை பேணிச் செல்லும் போது அந்த இருப்பு மனித பாவனைக்கு உகந்ததற்றதாக மாறும் போக்கை குறைத்துக் கொள்ளல் மற்றும் இருப்பை உச்ச நியமத்தில் பேணிக் கொள்ளவதற்காக இரசாயண பொருட்களின் பாவனையை குறைத்துக் கொள்ளல் மற்றும் அற்காக செலவாகும் கிரயத்தை குறைத்துக் கொள்வதனை நோக்காக் கொண்டு 34,300 மெற்றிக் டொன் கொள்ளவுடன் கூடிய 06 விஞ்ஞான ரீதியான களஞ்சியங்களை ரூபா 296 மில்லியன் செலவில் திணைக்களத்தினால் நவீனமயமாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த களஞ்சியத்தை நிர்மாணித்த நோக்கிற்காக பயன்படுத்தி இருக்காததுடன் 28,000 அடி பரப்பளவுடைய வேயங்கொட 01 களஞ்சியம் மருத்துவ வழங்கல் பிரிவினால் மருத்துவ உபகரணங்களை களஞ்சியப்படுத்துவற்கும் 28,000 சதுர அடி கொண்ட வேயங்கொடை இலக்கம் 09 களஞ்சியசாலை தனியார் நிறுவனமொன்றினால் தேங்காய் பால் ஏற்றுமதி உற்பத்திக்காகவும் சுமார் 04 ஆண்டுகளாக பயன்படுத்தப்படுகின்றன. | வேயங்கொடை இலக்கம் 01 களஞ்சியம் மருந்துவ வழங்கல் பிரிவின் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை களஞ்சியப்படுத்த ரூபா 420,000 ஆன மாதாந்த குத்தகையின் கீழ் வழங்கப்பட்டுள்ளதென. வேயங்கொடை இலக்கம் 09 களஞ்சியம் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 400,000 மாத வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கை 2021.12.31 திகதியுடன் முடிவடைந்துள்ளதென. | களஞ்சியத்தை நிர்மாணித்த நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாவிட்டால், அக் களஞ்சியத்தை ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையைப் பின்பற்றி வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்குரிய குத்தகை உடன்படிக்கைகள் செயல் ஊக்கத்துடன் பேணிக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | களஞ்சியங்களை விஞ்ஞான ரீதியில் பயன்படுத்தாததன் காரணமாக உலக உணவு நிகழ்சித் திட்டத்தின் கீழ் அரிசி களஞ்சியப்படுத்தி வைத்துள்ள 04 களஞ்சியங்களில் (அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட களஞ்சியம் உட்பட) களஞ்சியப்படுத்திய காலத்திற்குரியதாக 06 புகைபிடித்தல் தடவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக Ceylon pest control Co.(Pvt) Ltd நிறுவனத்திற்கு ரூபா 3,171,842 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரசாயன பொருட்களின் பயன்பாட்டை குறைக்கும் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | விஞ்ஞான ரீதியான களஞ்சியங்களாக நிர்மாணித்துள்ள போதும் இந்த களஞ்சியங்கள் தற்போது பயன்படுத்தப்படுவது உலக உணவுத் நிகழ்சித் திட்டத்தின் கீழான உணவுகளை களஞ்வியத்துவற்கு ஆகையால் தொடர்ந்து களஞ்சியப்படுத்தியுள்ள உணவுப் பொருட்களிற்கு பூச்சிகளை மற்றும் பீடைகளை அகற்ற புகைபிடிக்க நேரிடுவதென. | களஞ்சியத்தை விஞ்ஞான ரீதியாக பயன்படுத்த மற்றும் களஞ்சியத்தை பராமரிக்கும் செலவுகளை குறைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 03 களஞ்சியங்களில் உணவு நிகழ்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் சுமார் ஓராண்டு காலமாக களஞ்சிப்படுத்தப்பட்டு காணப்பட்டதுடன் இந்த மூன்று களஞ்சியங்களினதும் கொள்ளவு 17600 மெற்றின் டொன் ஆன போதும் பயன்பாடு 8110 மெற்றிக் டொன்கள் ஆகும். அதன் பிரகாரம் அந்த விஞ்ஞான ரீதியான களஞ்சியங்களில் 9490 மெற்றிக் டொன் குறை பயன்பாட்டுடன் நிலவின. | களஞ்சியங்களினது கொள்ளவு 17,600 மெ.டொ ஆன போதும், உலக உணவுகள் அமைப்பினால் வழங்கும் உணவு இருப்புக்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்படுவதாக மற்றும் அதன் பிரகாரம் குறை பயன்பாடு காணப்பட முடியுமென. | களஞ்சிய பயன்பாட்டை அதிகபட்ச அளவில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | விஞ்ஞான ரீதியான களஞ்சியங்களை பேணிச் செல்வதற்காக பொருத்திய வாயு பதனாக்கித் தொகுதியும் விளைவற்று காணப்பட்டது. | உலக உணவுகள் அமைப்பின் அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். |

### 3.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதி இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதி சுற்றிக்கையின் 12.1 பந்தி பிரகாரம் அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் வருடாந்த செலாற்றுகை அறிக்கையை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதென. | அரச நிதி சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடிவடைய முன்னர் சபையில் முன்வைப்பதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2022 ஆண்டிறகு உரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024 ஏப்ரல் 30 திகதி வரையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | |

**3.5 பெறுகைகள்**

கெகிராவ களஞ்சியத்தை சுற்றிவர யாணை வேலி நிர்மாணிக்கும் ஒப்பந்தம் வெட் இன்றிய ரூபா 5,918,926 தொகைக்கு 2020 திசெம்பர் 20 திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் வெட் உடன் ரூபா 6,640,407 செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.3 பந்திக்கு முரணாக மட்டுப்படுத்தப்பட்ட போட்டி விலை முறையின் கீழ் 11 நிறுவனங்களிலிருந்து விலைமனு கோரியிருந்த போதும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டி விலை முறையினை தெரிவு செய்யும் அடிப்படை சர்ச்சைக்குரியதாக இருந்ததுடன் விலைமனு திறக்கும் தினத்தை 14 நாட்களால் நீடிக்குமாறு தெரிவு செய்த நிறுவனத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கை பிரகாரம் காலநீடிப்பு செய்திருந்த போதும் விலைமனு கோரிய 11 நிறுவனங்களிற்கு அந்த அறிவித்தலை விடுத்தற்கான சான்றுகள் காணப்படவில்லை. | பதிவு செய்த வழங்குனர்களிலிருந்து மற்றும் "ரேன்போ பேஜஸ்" இலிருந்து தெரிவு செய்த 11 நிறுவனங்களிலிருந்து விலைமனு கோர ஆணையாளரினால் 2021.11.05 திகதி அங்கீகார் வழங்கியுள்ளதாக மற்றும் அந்த 11 நிறுவனங்களிற்கு கடிதம் அனுப்பியதாக பதிவுத் தபால் பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்த முடியுமா? முடியாததா? | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 03 நிறுவனங்களினால் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த போதும், ரூபா 40,000 ஆன வங்கி பிணைமுறி இல்லாத காரணத்தால் 02 நிறுவனங்களின் விலைகள் நிராகரிக்கப்பட்டு இருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட நிறுவனமும் ரூபா 40,000 ஆன பண வைப்பை மாத்திரம் செய்திருந்தது. | தெரிவு செய்யப்பட்ட மணுதாரர் பணமாக பிணை வைத்துள்ளதுடன் மற்றைய 02 நிறுவனங்களும் விலைமனு பிணை வைக்காததால் ஆரம்ப மதிப்பீட்டின் போது நீக்கப்பட்டன. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஒப்பந்த உடன்படிக்கையில் | மீளப் பெறுதல் கடிதத்தில் ஏனைய | அரச பெறுகைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த காலம் மற்றும் ஒப்பந்த பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்காததுடன் ஏற்புக் கடிதம் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.7.1 இற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருக்காததுடன் BOQ இல் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 182,000 பெறுமதியான அத்தியாவசிய வேலை உருப்படிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் இறுதிக் கொடுப்பனவை செய்யும் போது வேலைகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதாக தொழிநுட்ப உத்தியோகத்தர் சான்றிதலை பெற்றிருக்கவில்லை. | அனைத்துத் தகவல்களும உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் செயலாற்றுகை காப்பின் பெறுமதி மற்றும் திகதி மாத்திரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என. | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சில உருப்படிகள் பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு மாற்றமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவான தொகை ரூபா 1.111,323 ஆகவிருந்தது. | மதியுரை சேவையை வழங்கியுள்ள பொறியில் செயற்பாடுகள் தொடர்பான மத்திய மதியுரை பணியகத்தினால் (CECB) வழங்கியுள்ள அவதானிப்பு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதென. | மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் பாவனைக்காக உள்ள 17 களஞ்சியங்களில் 06 களஞ்சியங்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டு இருந்ததுடன் எஞ்சிய 11 களஞ்சியங்களும் விளைவற்று காணப்பட்டன. | பரகம்மன மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 03 களஞ்சியங்கள் 2024 ஆம் ஆண்டிற்காக குத்தகை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 3 களஞ்சியங்கள் எதிர்காலத்தில் பெறுகைகள் நடவடிக்கையின் பிரகாரம் குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக மற்றும் இன்னுமோர் களஞ்சியத்தின் ஒரு பகுதி உதவியாக கிடைக்கும் உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு | களஞ்சியங்களை திறமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | களஞ்சிய பழுதடைந்த நிலையில் உள்ளதென. | |
| (ஆ) | மெற்றிக் டொன் 16920 கொள்ளவு கொண்ட பயன்படுத்த முடியாத 04 களஞ்சியங்கள் காணப்பட்டதுடன் அந்த களஞ்சியங்கள் 02 முதல் 11 வருடங்களாக பயன்படுத்தப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் 08 களஞ்சியங்கள் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் காணப்பட்டதுடன் அந்த களஞ்சியங்களும் திருத்தப்படாமை மற்றும் உரிய முறையில் பராமரிக்கப்படாமை காரணமாக பாவனைக்கு பொருத்தமற்ற நிலைக்குச் செல்லும் சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | கடுமையாக பழுதடைந்துள்ள இந்தக் களஞ்சியங்களை திருத்துவதற்காக பெருந்தொகை பணம் செலவிடப்படும் என மதிப்பிடப்பட்டுட்டுள்ளதுடன் ஏற்பாடு ஒதுக்கப்படாமல் மற்றும் களஞ்சியங்களை பாவனைக்கு கோரும் நிறுவனங்களின் ஊடாகவே் திருத்தங்களை செய்து கொள்ள கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | களஞ்சியங்களை சிறப்பாக பராமரிக்க வேண்டியதுடன் அனைத்து பெரிய களஞ்சியங்களை பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |
| (இ) | முப்பதாண்டு குத்தகை அடிப்படையில் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 4 களஞ்சியகள் அலுவலக கட்டிடத்தொகுதி மற்றும் காணிகள் தனியார் நிறுவனமொன்றிற்கு குத்தகை வழங்கப்பட்டிருந்ததுடன் காணித் பகுதியில் அந்த நிறுவனத்தினால் அங்கீகாரமின்றி கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும், களஞ்சியம் மற்றும் வளாகங்கள் 05 ஆனது 05 வருடங்களிற்கு ஒவ்வொறு வருடமும் புதுப்பிக்கும் அடிப்படையில் மேற்குறித்த நிறுவனத்திற்கே ஒப்படைத்திருந்ததுடன் அந்த களஞ்சியங்களில் 04 களஞ்சியங்களை அங்கீகாரமின்றி ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. | திருத்தத வேலைகள் அல்லது புதிய நிர்மாணத்திற்காக ஆணையாளரின் எழுத்துமூல அங்கீகாரம் கட்டாயமாக பெறப்பட வேண்டுமென குறித்த நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதென. | குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள களஞ்சியங்கள் தொடர்பில் முறையான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2016 ஆண்டில் 06 ஆம் இலக்க களஞ்சயித்தை ஆய்வுகூடமொன்றாக மாற்றுவதற்கு ரூபா 3,495,536 செலவிடப்பட்டிருந்த போதும் அந்த ஆய்வுகூடம் கணக்காய்வு திகதியன்று விளைவற்று காணப்பட்டது. | 2024 ஆண்டில் உணவுப் பொருட்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளிற்காக இந்த ஆய்வுகூடத்தை பயன்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். | ஆய்வுகூடத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் உட்படுத்தியுள்ள ரூபா 200,637,572 ஆன மிகை அறவிட்டு கூட்டுறவு கடன் மீதிகளை உறுதி செய்வதற்குரிய எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இது குறித்து விசாரித்தறிந்து அறிவட நடவடிக்கை எடுப்பதென. | கடனை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் கூற்றில் உட்படுத்தக் கூடாத அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கில் மரணித்த, ஓய்வுபெற்ற, சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,387,731 மீதியை தொடர்ந்தும் அறவிட அல்லது பதிவழிக்கவுள்ள நட்டங்கள் தொடர்பான கூற்றினுள் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2022 ஆண்டில் ஓய்வுபெற்ற இரண்டு அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 176,800 தொகை கடன் அறவீடு இணைப்பு (1) நட்டம் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் (i) ஆண்டினுள் இழப்பு அறவீட்டின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நிலுவை கடன் மீதிகளை கைவிடுவதற்காக நிதிப் பிரமாணம் 113 இன் கீழ் அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக மற்றும் ஏனைய கடன் மீதிகளை அறவிடுவதற்காக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மரணித்த ஒர் அலுவலர் மற்றும் ஓய்வு பெற்ற இரண்டு அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய 10 ஆண்டுகள் பழமையான ரூபா 303,749 கடன் மீதிகள் தொடர்பாக தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத்தின் 4.4, 4.2.4 மற்றும் 4.2.5 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் பணித்தடை செய்யப்பட்டுள்ள 07 அலுவலர்களிடமிருந்து மற்றும் 08 கடமையை விட்டுச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,083,982 கடன் மீதி தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் கீழ் வழிகாட்டல் 01 இன் (உ) பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மரணித்த அலுவலரின் ஓய்வூதிய உரிமையை பெற எவரும் முன்வராததுடன் ரூபா 154,130.31 கடன் தொகைக்கு பிணையாகவுள்ளது தேசிய காப்புறுதி பொருப்பு நிதியமாகையால் அது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திற்கும் தகவல்களை வழங்கியுள்ளதாக மற்றும் வேலை தடை செய்யப்பட்ட அலுவலர்கள் தொடர்பாக விரைவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொளவதென. | தாபன விதிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஜூலை 19 திகதிய கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் 2018 ஜூலை 31 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பழங்கள், காய்கறிகள், வெங்காயம் மற்றும் ஏனைய பொருளாதார ரீதியில் நன்மை தரும் பயிர்களின் விலை ஏற்ற இறக்கத்தை குறைப்பதற்காக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு அண்மையிலுள்ள இடத்தில் வெப்பநிலை கட்டுப்பாட்டு களுஞ்சிய வசதியை நிறுவுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | | அமைச்சரவை முடிவின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (i) | களஞ்சியத்திற்கு அடிக்கல் நடும் விழாவிற்கு ரூபா 4,855,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 5,656,499 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 2,517,637 தொகை அதாவது 44 சதவீதம் 07 பத்திரிகைகளில் விழா தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் பிரசுறிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | செலவுகளை நன்றாக முகாமைத்துவம் செய்ய வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இந்த நிர்மாணத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியை பயன்படுத்துவதற்கும் அதன் உரிமையை உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கவும் அமைச்சரவை அயங்கீகாரம் வழங்கியிருந்த போதும், 05 வருடங்கள் கடந்த போதும் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் உடன்படிக்கை பிரகாரம் 06 மாதங்களில் வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டிய போதும் அக்கால எல்லையை விஞ்சி 04 வருடங்களுக்கு அதிக காலம் கடந்திருந்த போதும் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை. | காணி தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் கோவிட் தொற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக திட்டமிட்ட காலத்தினுள் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய முடியவில்லையென. | காணி உரிமையை பெற்றுக் கொள்ளல் மற்றும் நிர்மாண பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |
| (iii) | 2006 பண்டங்கள் மற்றும் வேலைகள் தொடர்பான பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3 பந்தி பிரகாரம் முன்னைய பெறுகையின் போது சுற்றாடல் மற்றும் சமூக தாக்கத்தினை மதிப்பிட வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்காத காரணத்தால் கழிவுநீர் சுத்திகரிப்பு தொகுதியொன்றின் தேவைப்பாடு நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு செல்லுகையில் இனங்காணப்பட்டிருந்தது. 2021 மார்ச் 23 திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் களஞ்சியத்திற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ள தொழிநுட்பம், கிரயத்தை ஆக்கபூர்வமாக மற்றும் காலநிலைக்கு பொருத்தமானவாறு மற்றும் களஞ்சியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக பூரணப்படுத்த வேண்டிய நிபந்தனைகள் எவை என்பது தொடர்பாக விரிவான ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு கருத்திட்டத்தை ஆரம்பித்து 02 ஆண்டுகளின் பின்னர் அமைச்சரவை அங்கீகார வழங்கியிருந்த போதும் கணக்காய்வு திகதிவரை 04 ஆண்டுகள் காலத்தை விஞ்சியிருந்த போதும் அந்த ஆய்வினை மேற்கொண்டிருக்கவில்லை. | களஞ்சியத்தை நிர்மாணித்த பின்னர் வெப்பநிலை கட்டுப்பாட்டு கட்டிடத் தொகுதி முகாமைத்துவத்திற்காக பொருத்தமான நிறுவனம் ஒன்றை தெரிவு செய்யும் பெறுகைகள் நடவடிக்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதென. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை திணைக்களம் தனியார் துறைக்கு வாடகைக்கு வழங்கியுள்ள களஞ்சியம் மற்றும் 28 வளாகங்கள் தொடர்பாக 11 தனியார் துறை நிறுவனங்களிடம் இருந்து ரூபா 7,928,378 தொகையும், அரச நிறுவனங்களிற்கு குத்தகைக்கு வழங்கியுள்ள 21 களஞ்சியங்கள் தொடர்பாக 06 அரச நிறுவனங்களிலிருந்து ரூபா 32,267,674 தொகையும், உடமையை பெற்றுக் கொள்ள மற்றும் நிலுவை களஞ்சிய வாடகை அறவிட சட்ட நடவடிக்கை எடுத்துள்ள களஞ்சியங்கள் தொடர்பாக 05 நிறுவனங்களிலிருந்து ரூபா 20,913,506 தொகையும், வாடகைக்கு வழங்கி மீண்டும் சுவீகரித்திருந்த 30 களஞ்சியங்கள் தொடர்பாக ரூபா 50,710,877 தொகையுமாக ரூபா 111,820,436 ஆன நிலுவை களஞ்சிய வாடகை காணப்பட்டது. | ஏற்றுக் கொள்வதென. | ஒவ்வொரு மாதமும் களஞ்சிய வாடகையை முறையாக அறவிடுவதன் மூலம் நிலுவை வாடகை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தான்யகம வீட்டுத் தொகுதியில் தற்போது குடியிருக்கும் வீடுகள், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் வீடுகள் மற்றும் மீண்டும் சுவீகரிக்கப்பட்ட வீடுகளிலிருந்து ரூபா 11,527,480 ஆன வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | 05 வீடுகளிற்கு வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென மற்றும் மேலும் 02 வீடுகளிற்கு தாக்கல் செய்யப்பட்ட 02 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருவதுடன் எஞ்சிய 20 வீடுகளின் உடைமையை திணைக்களத்திற்கு மீண்டும் சுவீகரித்துள்ளதென. | நிலுவை வீட்டு வாடகையை விரைவல் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2020 ஏப்ரல் 29 திகதிய இலக்கம் அப/20/0722/218/010 கொண்ட அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் திறந்த சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுப்பதற்காக நெல் இருப்பை பயன்படுத்தி அரிசி உற்பத்தி செய்வதற்கு தேவையான வசதிகளை வழங்க சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விரைவில் கடன் உதவி வழங்கும் நிகழ்சித் திட்டத்தினூடாக 2020 முதல் 2023 வரை ரூபா 423.7 மில்லியன் கடன் தொகையை வழங்குவது | | |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடனை சுழற்சிக் கடனாக் பயன்படுத்த அங்கீகம் வழங்கப்படா போதும் அந்த சுழற்சிக் கடனாக பயன்படுத்தியுள்ளதால் உடன்படிக்கை பிரகாரம் கடன் வழங்கி 06 மாதங்கள் பூர்த்தியானவுடனே அந்த தொகையை உணவு ஆணையர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் வழங்கி 2020 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வழங்கிய கடனை அறவிட்டு மீண்டும் அந்த சங்கங்களுக்கு வழங்கி அந்த நிதியத்தை சுழற்சி நிதியமொன்றாக பயன்படுத்த ஆரம்பித்துள்ளதென. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கடன் தொகையை பெற்றுக் கொண்ட திகதியிருந்து 06 மாதங்கள் செல்ல முன்னர் இரண்டாம் தரப்பினரினரான மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளரிற்கு செலுத்தி முடிக்க மூன்றாம் தரப்பினரான கூட்டுறவு சங்கம் மூலம் உடன்படிக்கையின் (iii) பந்தி பிரகாரம் உடன்பட்டிருந்த போதும், 06 மாாங்களை விஞ்சிய ரூபா 155.7 மில்லியன் பெறுமதியான கடன் மீதிகள் கணக்காய்வு திகதி 2024 மே 03 திகதி வரையும் செலுத்தி முடித்திருக்காததுடன் உடன்படிக்கையின் 3(vii) பந்தி பிரகாரம் ஒரு மாதத்திற்கு 1.5 சதவீதம் தாமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் உடன்படிக்கையின் 5(iv) பந்தி பிரகாரம் அரசிற்கு உள்ள கடனை தீர்ப்பது தொடர்பாக அனைத்து சட்டரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முதலாம் தரப்பினரிற்கு உணவு ஆணையானர் பொறுப்புடன் கடப்பட்டள்ளதுடன் 01 ஆண்டு முதல் 01 ஆண்டு 11 மாதங்கள் வரை காணப்படும் மேற்படி கடன் மீதிகள் தொடர்பில் சட்டரீதியான நடடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், மாகாண நிதி குற்றவியல் புலனாய்வு பிரிவு, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகிய தரப்பினரிற்கு கடன் அறவிடுவது தொடர்பில் செயற்படுமாறு அறிவுரை வழங்கியுள்ளதென. | கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | இந்த கடன் வழங்குவதன் முக்கிய நோக்கமாவது விவசாயிகளிற்கு அவர்களின் அறுவடைகளை நியாயமான விலைக்கு விற்பனை செய்து கொள்வதற்காகும் நுகர்வோரிற்கு சுமக்க முடியுமான விலைக்கு அரிசி வழங்க சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை மேம்படுத்துவதான போதும் கடன் தொகையை தீர்க்காததன் மீது நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாதுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | இந்த வேலைத் திட்டத்தின் குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை இனங்கண்டதன் பின்னர் அவற்றை தவிர்த்துக் கொள்ள பொருத்தமான வழிகாட்டி மற்றும் அறிவுரைகளை சுற்றறிக்கை மூலம் வழங்கியுள்ளதென. | கடன் தொகையை தீர்த்து எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அ.ப/24/0497/0627/010 அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தினை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதனால் இந்த பதவியை உறுவாக்குவது தொடர்பான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதென. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |